# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364157

1. District : Namakkal PS: V&AC Year: 2026 FIR No.: 09/AC/2026 Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 28.08.202

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a), 7(a)r/w 12, 7-A
(ii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 27.08.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 1510hrs Time to : 2330hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 28.08.2026 Time : 1415hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol-III Time : 1445hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 4 kms North west.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : — (b) Address : Food Safety and Drug Administration Department, Namakkal District Collectorate Annexure building
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. R. Raguraathan (b) Father's/ Husband's Name : Tr. J. Ramaraj
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : Age-48 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ICO / Deputy Collector (g) Address : Inspection cell office, Salem, Dharmapu Namakkal & Krishnagiri districts, Collectorate Salem.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tr. S. Selvakumar, Food safety officer, Elachipalayam Block i/c Namakkal Corporation, 2) Tmt. L. Subha Sri, Food safety officer (Training) Namakkal, 3) Tr. C. Boopathi s/o chinnasamy, 1/Ab North street, Muthukapatti, Namakkal, 4) Tr. K. Nehru s/o keppuraj, 2/179, Ettikulathupatti Pala.yur(P.O) Vedasandur T.K, Dindigul Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet If necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted,

Separate sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/8/2026

14. Signature / Thumb-impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

28/08/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.08.2026 15 30hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.PRABHU
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police, VAC, Namakkal.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/AC/2026, u/s. 7(a), 7(a) r/w 12, 7-A of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...,**

இன்று 28.08.2026-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 14.15 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்த போது சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு.R.ரகுநாதன் அவர்கள் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் நேரில் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரினை பெற்று உத்தரவுப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கிறேன். மேற்படி புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் திரு.R.ரகுநாதன், த.பெ.ராமராஜ், ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, நாமக்கல். ஐயா, பொருள்: திடீர் தணிக்கை- நாமக்கல் மாவட்டம் நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அலுவலகத்தில் 28.08.2026 பிற்பகல் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் ஒப்படைத்தல் மற்றும் நடவடிக்கை எடுக்க கோருதல்-தொடர்பாக. பார்வை: சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகளின் நாள்:27.08.2026. நான் சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நாமக்கல் மாவட்ட ஆட்சியரக கூடுதல் கட்டிடத்தின் தரைத்தளத்தில் இயங்கிவரும் நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அங்குவரும் உணவு பொருள் வணிக நிறுவனங்கள், தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோர்களுக்கு உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் வழங்குவதிலும் மற்றும் உணவு பண்டங்கள் விற்பனை நிலையங்களில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு மீண்டும் விற்பனை நிலையங்களை திறப்பதற்கான உத்தரவினை பெறுதல் போன்ற காரணங்களுக்காக வியாபாரிகளிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்தில் 27.08.2026-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில்

27.08.2026-ம் தேதி மதியம் 15.00 மணிக்கு நான் மற்றும் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.பிரபு மற்றும் அரசு சாட்சி திரு.S.ஜெகதீசன், த/பெ.சீனிவாசன், வருவாய் ஆய்வாளர், நல்லூர் பிர்க்கா, பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் இணைந்து நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்குள்ள நியமன அலுவலர் அறை மற்றும் அலுவலக அறைகளில் சோதனை செய்யப்பட்டு அலுவலகத்திலிருந்த அலுவலர்கள், தனிநபர்கள் உட்பட அனைவரும் திடீர் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கையானது 27.08.2026-ஆம் தேதி பிற்பகல் 15.10 மணி முதல் இரவு 23.30 மணி வரை நடைபெற்றது. இந்த திடீர் தணிக்கையின் போது நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை அலுவலகத்தில் பணியாளர்கள், அலுவலகத்தில் இருந்த தனிநபர்கள் வாடிக்கையாளர்களுக்கு தேவையான அன்றாட அலுவலக வேலைகளை செய்து கொடுக்கும் புரோக்கர்களாக செயல்பட்டு வந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அவர்கள் வைத்திருந்த ஆவணங்களை பார்வையிட்டும், அவர்களிடமிருந்து மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக கொண்டுவந்திருக்கலாம் என சந்தேகிக்கதக்க வகையில் அவர்கள் தங்கள் வசம் வைத்திருந்த கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது. இச்சோதனையின்போது அந்த அலுவலகத்தில் எலச்சிபாளையம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.S.செல்வகுமார், உணவு பாதுகாப்பு அலுவலர் (பயிற்சி) திருமதி.L.சுபஸ்ரீ, அலுவலக உதவியாளர் திருமதி.சரஸ்வதி, தற்காலிக டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் திருமதி.நந்தினி மற்றும் தனிநபர்கள் திரு.பூபதி, திரு.நேரு, திரு.மோகன்ராஜ் மற்றும் திரு.ஜெயபிரகாஷ் ஆகியோர் ஆஜரில் இருந்தனர். அங்கிருந்த நபர்களில் திரு.பூபதி என்பவரை விசாரிக்க தான் சேம்பிள் கலக்சன் எக்சிகியூடிவாக இருப்பதாக தெரிவித்தார். ஆனால் அங்கு வந்திருந்த தனி நபர்களான திரு.மோகன்ராஜ் மற்றும் திரு.ஜெயபிரகாஷ் ஆகியோர் உரிமம் விண்ணப்பித்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற வேலைகளுக்காக அந்த அலுவலகத்திலிருந்து பூபதி என்ற அலுவலர் போன் மூலம் அழைத்ததின்பேரில் வந்ததாக கூறினர். அவர்களின் கருத்துகளில் இருந்த முரண்பாட்டினால் திரு.பூபதியை சோதனை செய்ய அவரின் சட்டையின் மேல்புற இடது பாக்கெட்டில் ரூபாய் 500/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அதை பற்றி விசாரிக்க அவர் தான்

சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கதக்க வகையில் இருந்ததால் அதை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் தனது பேண்ட்டின் முன்புற வலது பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார் அதை எண்ணிப்பார்க்க ரூ.10,000/-ம் இருந்தது. அதுகுறித்து கேட்டபோது பதற்றத்துடன் அலுவலக செலவிற்காகவும், லேப் செலவிற்காகவும் பேங்கில் இருந்து எடுத்து வைத்திருப்பதாக சொன்னவர் சற்று யோசித்துவிட்டு பிறகு தனது பக்கத்துவீட்டு பெண்ணுக்கு ஆஸ்பிட்டல் செலவுக்கு கொடுப்பதற்காக கொண்டுவந்ததாகவும் முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னார். எனவே திரு.பூபதி அந்த அலுவலகத்தில் இடைத்தரகராக செயல்படலாம் எனவும், அந்த பணம் உணவு பாதுகாப்பு துறை அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவந்திருந்த பணமாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்க நம்பத்தகுந்த காரணம் இருந்ததால் அந்த பணம் ரூ.10,000/-ஐ (500x20) ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.நேரு என்பவரை பற்றி விசாரிக்க தான் அங்கிருந்த எலச்சிபாளையம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.S.செல்வகுமார் என்பவரின் பக்கத்துவீட்டுக்காரர் என்றும் அலுவலக வேலைகளில் உதவியாக அவருடன் இருப்பதாகவும் அவர் சொல்லும் வேலைகளை செய்வதாகவும், அதற்காக தனக்கு கூலியாக ரூபாய் 500/- தினமும் கொடுப்பதாகவும் தெரிவித்தார். மேலும் தனது பேண்ட்டின் பின்பக்க இடது பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க ரூ.10,000/-ம் இருந்தது, அதை பற்றி விசாரிக்க அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாகவும், பிறகு பதற்றத்துடன் தனது காருக்கு டெக்ரேசன் செய்வதற்காக தனது மனைவியிடம் வாங்கிவந்ததாகவும் முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னார். எனவே திரு.நேரு அந்த அலுவலகத்தில் இடைத்தரகராக செயல்படலாம் எனவும், அந்த பணம் உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.S.செல்வகுமாருக்கு அல்லது பிற அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்டதை அவர் பெற்று வைத்திருக்கலாம் எனவும் சந்தேகிக்க நம்பத்தகுந்த காரணம் இருந்ததால் அந்த பணம் ரூ.10,000/-ஐ (500x20) ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வசமிருந்த ஊதா கலர் LT TRENDZ என்று பொறிக்கப்பட்ட பையை சோதனை செய்ய அதில் வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.24,000/- பற்றி கேட்க பதற்றத்துடன் பதில் ஏதும் சொல்லாமல் சிறிது நேரம் கழித்து தனது சொந்த பணம் என்றும், பிறகு Fostac

training கொடுத்ததில் மீதம் உள்ள பணம் என்றும் முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னார். எனவே அந்த பணம் ரூ.24,000/-ஐ (500x36, 200x20, 100x20) கையூட்டாக கொடுக்க கொண்டுவந்திருந்த பணமாக இருக்கலாம் என சந்தேகிக்க நம்பத்தகுந்த காரணம் இருந்ததால் அந்த பணம் ரூ.24,000/-ஐ ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கிருந்த சுபஸ்ரீ என்பவரை விசாரிக்க தான் உணவு பாதுகாப்பு அலுவலராக பயிற்சியில் இருப்பதாக தெரிவித்தார். அவரது கருப்பு கலர் ஒன்வே பையில் இருந்த கைப்பையை பெண் காவலர் உதவியுடன் சோதனையிட அதில் ரூ.2,300/- இருந்தது, அது குறித்து விசாரிக்க அவர் தான் சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கதக்க வகையில் இருந்ததால் அதை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் ஒன்வே பையில் கருப்பு கலர் பையில் I Link Digital Thinking Beyond என்று பொறிக்கப்பட்டிருந்த ஒரு கைப்பையை சோதனையிட அதில் ரூ.36,500/- (500x53, 100x100) இருந்தது, அது குறித்து அவரிடம் விசாரிக்க J.K.S. Quality Slip Pad என்று அச்சிடப்பட்ட சிவப்பு கலர் நோட்டை தனது பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதில் Food Safety 07.08.2026 என்று ஆரம்பிக்கப்பட்டு 14 பக்கங்கள் எழுதப்பட்டு கடைசி பக்கத்தில் Balance amount-36,500 என்று முடிக்கப்பட்டிருந்தது. அது குறித்து கேட்க எலச்சிபாளையம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.செல்வகுமார் நாமக்கல் நகருக்கும் கூடுதல் பொறுப்பு வகிப்பதாகவும், தான் அவரிடம் நாமக்கல் நகரில் பயிற்சி பெற்று வருவதாகவும், திரு.செல்வகுமார் அவர்களின் அறிவுரைப்படி உணவகங்கள் மற்றும் விடுதிகளின் பொறுப்பாளர்களுக்கு Fostac training கொடுப்பதற்காக அவர்களிடமிருந்து பயிற்சி ஏற்பாடுகள் செய்யும் செலவிற்காக 07.08.2026 மற்றும் 24.08.2026 ஆகிய தேதிகளில் வசூல் செய்த பணத்திற்கான விபரங்கள் என்று தெரிவித்தார். மேலும் 24.08.2026 அன்றைய பயிற்சிக்கான கட்டணம் நபர் ஒன்றுக்கு தலா ரூபாய் 1,500/- வீதம் வசூல் செய்ததாகவும் அதில் பயிற்சி தொடர்பான செலவுகள் போக மீதமுள்ள பணத்தை Parikshan என்ற நிறுவன பயிற்சியாளர் திரு.பிரவீன் என்பவருக்கு கொடுப்பதற்காக வைத்திருப்பதாகவும் திருமதி.சுபஸ்ரீ தெரிவித்தார். இது குறித்து அப்போது முகாம் அலுவல் முடித்து அலுவலகம் திரும்பி கொண்டிருந்த மரு.ஜெ.தங்கவிக்னேஷ் நியமன அலுவலர் அவர்களிடம் போனில் விசாரித்தபோது, மேற்படி பயிற்சி நடந்தது உண்மையெனவும், ஆனால் அவ்வாறான

பயிற்சிகளின்போது பயிற்சியாளருக்குரிய கட்டணத்தை பயிற்சி முடிந்தவுடன் உடனடியாக வசூலித்து கொடுப்பதுதான் வழக்கம் என்றும், தான் 24.08.2026 மற்றும் 25.08.2026 ஆகிய இரு நாட்கள் விடுப்பில் இருந்ததால் அந்த பயிற்சி குறித்து தான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார். எனவே திருமதி.சுபஸ்ரீ அவர்களிடம் நியமன அலுவலர் கூறியவாறு பணத்தை பயிற்சியாளருக்கு ஏன் பயிற்சி முடித்தவுடன் வழங்கவில்லை என்று கேட்டபோது, பயிற்சியாளர் பயிற்சி முடித்தவுடன் அவசரமாக புறப்பட்டு சென்று விட்டதாகவும், மேலும் பயிற்சிக்கு வந்த சில நபர்கள் அப்போது பணம் கொடுக்காததால் அதனை வசூல் செய்த பிறகு கொடுத்துவிடலாம் எனவும் செலவு போக மீதியிருந்த பணத்தை என்னையே வைத்திருக்குமாறு திரு.S.செல்வகுமார் சொன்னதால், அவரது அறிவுரைப்படி தான் அதை தனது பையிலேயே பத்திரமாக வைத்திருந்ததாகவும் சொன்னார். ஆனால் மேற்படி சிகப்பு கலர் நோட்டில் எழுதப்பட்டிருந்த வசூல் தொகை ரூ.30,000/- எனவும் அதில் செலவு ரூ.5,500/- எனவும் G-Pay ரூ.12,000/- எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி இருக்க வேண்டிய கையிருப்பு தொகை ரூ.24,500/-க்கு பதிலாக ரூ.36,500/- பையில் இருந்ததாலும், உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் பணமாக தனிநபர்கள் அல்லது நிறுவனத்திடமிருந்து வசூல் செய்ய அதிகாரம் இல்லையென நியமன அலுவலர் தெரிவித்ததாலும், மேற்படி முரண்பாடுகளால் அந்த பணமானது கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என சந்தேகிக்க நம்ப தகுந்த காரணம் இருந்ததால் அந்த பணம் ரூ.36,500/-ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் J.K.S. Quality Slip Pad என்று அச்சிடப்பட்ட சிகப்பு கலர் நோட்டும், அதிலிருந்த விவரங்கள் கையூட்டு பெற்று எழுதி வைக்கப்பட்ட விவரங்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. எனவே நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டபோது அங்கு ஆஜரில் இருந்த எலச்சிபாளையம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.S.செல்வகுமார் உணவு பாதுகாப்பு அலுவலர் (பயிற்சி) திருமதி.L.சுபஸ்ரீ ஆகியோர் விதிமுறைகளுக்கு மாறாக தனிநபர்களை அலுவலகத்தில் புரோக்கர்களாக செயல்பட்டு தங்களுக்காக கையூட்டு பெற அனுமதித்தற்காகவும், திரு.C.பூபதி, திரு.K.நேரு ஆகியோர் இடைத்தரகர்களாக செயல்பட்டு பொது மக்களிடமிருந்து பணம் பெற்று அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க முயன்று அவர்களுக்கு உடந்தையாக

இருந்தமைக்காகவும் மேற்படி அலுவலர்கள் மற்றும் புரோக்கர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக, மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட சந்தேகத்திற்கிடமான கணக்கில் வராத பணம் மொத்தம் ரூ.80,500/- J.K.S. Quality Slip Pad என்று அச்சிடப்பட்ட சிகப்பு கலர் நோட் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் இடைத்தரகர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். இது தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம்/- (XXX) 28 8 2026 (R.ரகுநாதன்).

Sir,

I received a computer typed complaint from Tr.R.Ragunathan, ICO/Deputy Collector, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts, Collectorate, Salem on 28.08.2026 at 14.15 hrs and awaiting for concurrence from DVAC, Chennai to register a regular case. Sd/-(xxx) (S.Prabhu) 28/8/26. Inspector of Police, V&AC., Namakkal.

Sir,

I received a computer typed complaint from Tr.R.Ragunathan, ICO/Deputy Collector, Salem on 28.08.2026 at 14.15 hrs and awaited for concurrence from DVAC to register a regular case and after getting oral concurrence from DVAC, Chennai, I registered a case in Namakkal V&AC Cr.No.09/AC/2026, u/s. 7(a), 7(a) r/w 12, 7-A of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 28.08.2026 at 14.45 hrs against the accused officers Tr.S.Selvakumar, FSO, Elachipalayam Block i/c. Namakkal Corporation, Tmt.L.Subhasri, FSO(Trg), Namakkal, Tr.C.Boopathi and Tr.K.Nehru (Private Individuals) Sd/-(xxx) (S.Prabhu) 28/8/26. Inspector of Police, V&AC., Namakkal.

The original FIR along with original computer typed complaint of the complainant Tr.R.Ragunathan are submitted to the Hon'ble Court of Principal

District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned.

28/08/26

(S. PRABHU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.